# எமது செல்லப் பிராணிகள்

பாடம் 4

குமார் : இன்று நாங்கள் என்ன செய்வோம்?

கமலா : அண்ணா, இன்று அமராவையும் நயனாவையும் வரச் சொல்வோமா?

குமார் : அதோ! நாம் சொல்லும் போதே அவர்கள் இருவரும் வருகின்றார்கள். வாருங்கள் அமர, வாருங்கள் நயனா.

கமலா : இன்று மேலும் நண்பர்கள் இருவர் வந்துள்ளனர்.

அமர : இதோ பாருங்கள். எனது செல்லப்பிராணி. நான் இதை அதிகம் விரும்புகின்றேன். மாமா எனக்குப் பரிசாக தந்தார்.

குமார் : ஆ! அழகான முயற்குட்டி.
நயனா மாமாவே இதை எமக்குத் தந்தார்.

கமலா : ஆமை நித்திரை போல் தோன்றுகிறது.

அமர : குமார், இன்று நாங்கள் என்ன விளையாடுவோம்?

குமார் : இன்று நாங்கள் இப்படி ஒரு வேலை செய்வோம். எமது செல்லப் பிராணிகளைப் பற்றி ஒப்படைப் புத்தகம் தயாரிப்போம்.

அமர : ஆ! அது மிகவும் நல்ல யோசனை. எமது ஆசிரியரும் இவ்வாறான புத்தகம் ஒன்றை விடுமுறையில் தயாரிக்குமாறு கூறினார்.

கமலா : நயனா! செல்லப்பிராணிகள் அனைத்தையும் படைத்தவர் கடவுள் என எமது ஆசிரியர் கூறியது உனக்கு நினைவுண்டா?

நயனா : ஆம் கமலா, அதுமட்டுமல்ல, இவைகள் யாவற்றுக்கும் விசேட இலட்சணங்களையும் கடவுள் கொடுத்துள்ளார் எனவும் கூறினார்.

அமர : இந்த விபரங்கள் அனைத்தும் எமக்கு மிகவும் முக்கியம்.

குமார் : சரி! அப்படியானால் நாங்கள் புத்தகம் செய்ய ஆரம்பிப்போம்.

கமலா : இரு செல்லப் பிராணிகளையும் எமது விளையாட்டு வீட்டுக்குள் வைப்போமா?

அமர : நல்லது, அது நல்ல யோசனை. அப்படியானால் நாங்கள் போவோம்.

நாய்



அணில்



பசுக்கன்று




முயல்



பூனை



ஆமை



செயற்பாடு

அமர, நயனா, குமார், கமலா நால்வரும் இணைந்து செய்யும் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள படங்கள் ஆகும். ஒவ்வொரு படத்தின் கீழும் சிறுகுறிப்பு எழுதுக. சின்னச் சிட்டுக் குருவியே உன்னைப் படைத்தது.